22.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஐந்தாண்டுகளுக்குப் பிறகு கோடையில் 45 அடியை எட்டிய வைகை அணை:**



வைகை அணையின் நீர்மட்டம் ஐந்தாண்டுகளுக்கு பிறகு கோடைக் காலத்தில் 45 அடிக்கு மேல் உயர்ந்துள்ளதால் இந்த ஆண்டு குடிநீர் பிரச்சினை இருக்காது. மேலும் முதல்போக சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீர் திறந்து விடப்படும் நிலை உருவாகியுள்ளது. தேனி மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களாக போதிய மழை இல்லாததால், அணைகளுக்கு நீர் வரத்து இல்லை. இதனால், கடந்த நான்கு வருடங்களாக வைகை அணை நீர்மட்டம் முழுக் கொள்ளவை எட்டவில்லை.

கடந்த 2014 ம் ஆண்டு மே 3 ம் தேதி அணையின் நீர் மட்டம் 21 அடியாக குறைந்தது. அதனால் மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்துக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியவில்லை. அதன் பின் கேரளத்தில் பெய்த மழையால் நீர்வரத்து ஏற்பட்டு குடிநீர் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

நடப்பாண்டில் மார்ச் மாதம் வைகை அணைக்கு நீர் வரத்து 30 கன அடியாக இருந்த நிலையில் அணையின் நீர்மட்டம் 35.11 அடியாக இருந்தது. இதனால் மதுரைக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஐந்து வருடங்களில் இல்லாத வகையில் கோடைகாலத்தில் தேனி மாவட்டத்தில் நல்ல மழை பெய்தது. வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான மூலவைகை மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து வியாழக்கிழமை காலை நீர்மட்டம் 45.34 அடியாக உயர்ந்தது. இதனால் நடப்பாண்டில் மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீர் திட்டங்களுக்கு கோடை காலத்தில் ஏற்படவிருந்த குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து குடிநீருக்காக வைகை அணையில் இருந்து கடந்த ஏப்ரல் 27 ம் தேதி முதல் 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும்: வைகை அணையிலிருந்து திண்டுக்கல், மதுரை மற்றும் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த ஒரு போக மற்றும் இருபோக சாகுபடி பகுதியில் சுமார் 1,50,043 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த பாசன பகுதிகளுக்கு 2011 ஆண்டுக்குப் பிறகு முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடாத நிலை இருந்துவந்தது. இந்நிலையில் இந்த ஆண்டு மே மாதம் அணையின் நீர் மட்டம் 45.34 அடியை எட்டியுள்ளது. அணைக்கு நீர்வரத்து 624 கன அடியாக உள்ளதால் அணையின் நீர் மட்டம் ஜூன் மாதம் 50 அடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு உயர்ந்தால் வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படலாம்.

**தேனி மாவட்டம் இரண்டாம் இடம்**

தமிழக அளவில் கடந்த மார்ச் முதல் மே மாதம் வரை கன்னியாகுமரி

மாவட்டத்தில் அதிகபட்சமாக 590.08 மி.மீ மழை பெய்துள்ளது. தேனி மாவட்டத்தில் 428.63 மி.மீ மழை பெய்து இரண்டாம் இடத்தையும், நீலகிரி மாவட்டத்தில் 380. 14 மி.மீ மழை பெய்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தேனி மாவட்டத்தில் பெய்த மழையளவு

| | | |
|---|---|---|
| 2011 | 1,124.08 | மி.மீட்டர் |
| 2012 | 618.20 | மி.மீட்டர் |
| 2013 | 842.53 | மி.மீட்டர் |
| 2014 | 1,102.72 | மி.மீட்டர் |

## குறைவான பருவமழை: தானியங்களை சேமிக்க மாநிலங்களுக்கு அறிவுறுத்தல்

நிகழ் ஆண்டு வழக்கத்தைக் காட்டிலும் குறைவான அளவே பருவமழை பெய்யக்கூடும் என்பதால், தானியங்களை இருப்பில் வைத்துக் கொள்ளுமாறு மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறைச் செயலர் கேசவ் தேசிராஜு வியாழக்கிழமை கூறியதாவது:

இந்த ஆண்டின் பருவமழைக் காலமானது வரும் ஜூன் 1-ஆம் தேதி முதல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கத்தைக் காட்டிலும் இந்த ஆண்டு பருவமழை குறைவான அளவே பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் நாடு முழுவதும் அடுத்த ஆண்டின் பயிர் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் மட்டுமின்றி நுகர்வோருக்கும் பாதிப்பு ஏற்படும். இந்த பாதிப்புகளைத் தடுக்கும் வகையில் தேவையான

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. தானியம், உரக் கிடங்குகளில் தேவையான அளவு இருப்பு வைத்துக் கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு மத்திய வேளாண் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த ஆண்டின் பருவம் தவறிய மழை, எதிர்வரும் குறைவான அளவு பருவமழை ஆகியவற்றின் காரணமாக, இந்த ஆண்டின் பயிர் விளைச்சல் மிகவும் குறைவாக இருக்கும் எனத் தெரியவருகிறது. நுகர்வோர் சட்டத்திருத்தம்: நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தச் சட்டத் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படும். நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் வகையிலான திருத்தங்கள் இதில் கொண்டுவரப்படவுள்ளன. இதன் மூலம் நுகர்வோரின் பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்படும் என கேசவ் தேசிராஜு தெரிவித்தார்.

**செண்பகத் தோப்பு அணையை மறுசீரமைக்க வேண்டும்**

செண்பகத்தோப்பு அணையை மறுசீரமைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு கூறினார். தமிழக அரசைக் கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் போளூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் சிவானந்தம் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் பரமேஸ்வரி ராஜ்குமார், மாவட்டப் பொருளாளர் பாண்டுரங்கன், பொதுக்குழு உறுப்பினர் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு வேலூர்-திருவண்ணாமலை சாலை, அண்ணாசாலை

உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்ற திமுகவினர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவில்லை, முதியோர் உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது, பலருக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை. இவற்றை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், கரும்பு நிலுவை பாக்கித் தொகையை தமிழக அரசே வழங்க வேண்டும், போளூரில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும், செண்பகத் தோப்பு அணையை மறுசீரமைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறினார்.

ஒன்றியச் செயலர்கள் அர்ச்சுனன், ஏழுமலை, சுப்பிரமணியன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தமூர்த்தி, சித்ரா சங்கர், கவிதா திருமால், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ்பாபு உள்ளிட்ட திமுகவினர் கலந்துகொண்டனர்.

## "நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட கைத்தறி ஆடைகளை அணிய வேண்டும்'

நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட கைத்தறி ஆடைகளை அணிய மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று, பணியாளர் தேர்வு ஆணையத்தின் கர்நாடக, கேரள, லட்சத்தீவு மண்டல இயக்குநரும், ஐஏஎஸ் அதிகாரியுமான விஜயலட்சுமிபிதரி கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க நிறுவனத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) சார்பில், பெங்களூரு குயின்ஸ் சாலையில் உள்ள ஜஹாங்கீர் கோதாரி நினைவு அரங்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற குளிச்சியான கைத்தறி ஆடைகள் கண்காட்சியைத் தொடக்கிவைத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

1935-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க நிறுவனம், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் பணியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 2.5 லட்சம் நெசவாளர்கள் கைத்தறி ஆடைகளை வழங்கிவருகின்றனர். அவர்களின் உற்பத்தியை விற்பனை செய்வதற்காக இந்தியா முழுவதும் 200 அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலமாக கைத்தறி ஆடைகளுக்கு இளைஞர்களிடையே ஆர்வம் அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. நவநாகரீக வடிவமைப்புகளில் கைத்தறி ஆடைகள் தயாரிக்கப்படுவது இளைஞர்களை ஈர்த்துள்ளது.

எனினும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், ஆதரிக்கவும் கைத்தறி ஆடைகளை அணிய மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அப்போதுதான் நெசவுத் தொழில் தழைக்கும். அறிவியல் வளர்ச்சியில் விசைத்தறியில் ஆடைகள் தயாரிக்கப்பட்டாலும், கைத்தறி ஆடைகளுக்கு தனி மவுசு உள்ளதை மறுக்க முடியாது.

ôரம்பரிய விழா காலங்களில் கைத்தறி பட்டு, பருத்தி ஆடைகளுக்கு எப்போதும் வரவேற்பு இருந்து வருவதை மறுக்க இயலாது. இதை அனைத்து காலத்திற்கு விரிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் கைத்தறி நெசவாளர்கள் நிம்மதியாக வாழ முடியும்.

கைத்தறி ஆடைகளுக்கு தள்ளுபடி வழங்குவதையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கர்நாடக மண்டல மேலாளர் பார்த்தசாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கண்காட்சி மே 27-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

**ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வசிக்கும் மக்களுக்கு, நான்கு ஆண்டுகளில், 15 ஆயிரத்து, 23 பயனாளிகளுக்கு, 60 ஆயிரத்து, 956 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.பால் உற்பத்தியை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கச் செய்யவும், ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. அதன்படி, 29, 30ல், திருப்பூர் மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது, என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**ரூ. 14 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்**

நாமக்கல்: நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 1,100 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,519, குறைந்த பட்சம், 3,965 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிக பட்சம், 4,339, குறைந்த பட்சம், 3,826 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1,100 மூட்டை பருத்தி, 14 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**பஜ்ஜி மிளகாய் உற்பத்தியை பெருக்க தோட்டக்கலை துறை அறிவுரை**

கூடலூர் : கூடலூாரில், இயற்கை முறை யில், பஜ்ஜி மிளகாய் உற்பத்தியில் ஈடுபட தோட்டகலை துறையினர் அறிவுறுத்தினர்.

கூடலூர் ஏழுமுறம் பகுதி யில், தோட்டகலை துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பில், இயற்கை தொழில் நுட்பத்தில், பஜ்ஜி மிளகாய் உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. தொழில்நுட்ப மேலாளர் யமுனா வரவேற்றார்.

முகாமுக்கு, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்து, 'இயற்கை முறையில், பஜ்ஜி மிளகாய் உற்பத்தி செய்வதன் அவசியம்; கிடைக்கும் கூடுதல் பலன்கள்' குறித்து விளக்கினார். இது தொடர்பாக, விவசாயிகளுக்கு களப்பயிற்சியும் அளிக்கப்பட்டது.முகாமில், விவசாயிகள், தோட்டக்கலை துறை ஊழியர்கள் பங்கேற்றனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் பானுபிரியா நன்றி கூறினார்.

**வன விலங்கு கணக்கெடுப்பு பணி துவக்கம்**

கூடலூர் : முதுமலை புலிகள் காப்பகத்தில் கணக்கெடுப்பு பணி துவங்கியது.
முதுமலை புலிகள் காப்பகத்தில், நேற்று காலை, 6:30 மணிக்கு, வன விலங்கு கணக்கெடுப்பு பணி துவங்கியது. இதற்கான அமைக்கப் பட்ட குழுவில், இரண்டு வன ஊழியர்கள், ஒரு கல்லூரி மாணவர் இடம் பெற்றுள்ளனர். இந்த பணி வரும், 25ம் தேதி நிறைவு பெறுகிறது.'வன விலங்குகள் கணக்கெடுப்பு பணி நடந்தாலும், சுற்றுலா பயணிகளுக்கான வாகனம் மற்றும் யானை சவாரி வழக்கம் போல் நடைபெறும்' என, வனத்துறையினர் தெரிவித்தனர்.

**முகூர்த்த சீஸனால் வெற்றிலை விலை அதிகரிப்பு தோட்டக்கலை துறை உதவிக்கு கோரிக்கை**

தஞ்சாவூர்: முகூர்த்த சீஸன் துவங்கியுள்ளதால், கடந்த ஆறு மாதங்களுக்கு பின், வெற்றிலை விலை சற்று அதிகரித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், காவிரி கரையோரம் உள்ள திருக்காட்டுப்பள்ளி, மணத்திடல், மைக்கேல்பட்டி, அந்திலி, கருப்பூர், வளப்பக்குடி, நடுக்காவிரி, திருவாலம் பொழில், திருப்பூந்துருத்தி, கண்டியூர், தில்லைஸ்தானம், ஆச்சனூர், திருவையாறு, அய்யம் பேட்டை, ராஜகிரி, பண்டாரவாடை, சுவாமிமலை, ஆவூர், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில், 12 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில், வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் வெற்றிலை, பெரும்பாலும் திருச்சிக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், ஐரோப்ப நாடுகளில் வெற்றிலை ஏற்றுமதிக்கு தடை செய்யப்பட்டுள்ளது. இதனால், தொடர்ந்து வெற்றிலை விலை கடும் விழ்ச்சியை சந்தித்தது. இந்நிலையில், முகூர்த்த சீஸன் துவங்கிய நிலையில் வெற்றிலை விலை, சற்று அதிகரித்து இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து, தமிழ்நாடு காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க தஞ்சை மாவட்ட துணைச் செயலாளர் சுகுமாறன் கூறியதாவது: ஐரோப்பிய நாடுகளில், வெற்றிலைக்கு தடை விதிக்கப்பட்டது. இது குறித்து பல்வேறு கோரிக்கை வைத்தும் மத்திய, மாநில அரசுகள் கண்டுகொள்ளவில்லை. பணப்பயிரான வெற்றிலை சாகுபடியில், பெரும் பின்னடைவு ஏற்பட்டு வருகிறது.இருப்பினும், கடந்த மாதம் வரை, ஒரு கவுளி (100 வெற்றிலை), ஐந்து முதல், 15 ரூபாய் வரை விலை கிடைத்தது. நூறு வெற்றிலை பறிப்பதற்கான ஆள் கூலி, வாகனச் செலவு, ஏஜென்ட் கமிஷன் என,மொத்தம், எட்டு ரூபாய் செலவாகிறது. இதனால், கூலிக்கு கூட வருவாய் கிடைக்காமல் திணறி

வந்தோம்.முகூர்த்த சீஸன் துவங்கிய நிலையில் திருமணம், வீட்டு விசேஷங்கள், கோவில் விழா போன்றவற்றுக்கு வெற்றிலை தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ரகங்களுக்கு ஏற்ப, 10 முதல், 25 ரூபாய் வரை வெற்றிலை விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும், வெற்றிலை சாகுபடி செய்ய ஏக்கருக்கு, 15 லட்சம் ரூபாய் செலவாகிறது. பாரம்பரியமாக வெற்றிலைச் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர் சாகுபடி தெரியாது. வெற்றிலை சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்களை மட்டுமே அறிந்துள்ள இந்த விவசாயிகள் நெல் அல்லது வாழை போன்ற மாற்றுப் பயிர் செய்வதற்கும் தயங்குகின்றனர். எனவே, மற்ற பணப்பயிர்களுக்கு தோட்டக்கலை துறை உதவி வழங்குவதை போல், எங்களுக்கும் அளிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

**தொடர் மழையால் அணைகள் வேகமாக நிரம்புகிறது**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக கோடை மழை பெய்து வருகிறது. கடந்த சில தினங்களாக மழையின் தாக்கம் அதிகம் இருந்ததால் பயிர் நிலங்கள், தோப்புகள், வாழைத் தோட்டங்கள் நீரில் மூழ்கின. புத்தேரி நெடுங்குளமும் உடைப்பு ஏற்பட்டது. பெரும்பாலான சாலைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. மலைகளிலும், குமரி மாவட்ட அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் பெய்த பெருமழை காரணமாக அணைகளுக்கு வரும் நீரின் அளவு கணிசமாக உயர்ந்தது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 39.30 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு சுமார் 602 கனஅடி தண்ணீர் வருகிறது. இதுபோல 77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 70.50 அடியை எட்டி உள்ளது. அணைக்கு வினாடிக்கு 770 கனஅடி தண்ணீர் வருகிறது. 18 அடி கொள்ளளவு கொண்ட சிற்றாறு-1 மற்றும் சிற்றாறு-2 அணைகளில்

இப்போது முறையே 17.01, 17.12 அடி தண்ணீர் உள்ளது. அணைகளுக்கு முறையே வினாடிக்கு 79, 117 கனஅடி தண்ணீர் வருகிறது. இதனால் இன்னும் ஒரு சில நாட்களில் அணை நிரம்பி மறுகால் பாயும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணை வழக்கமாக கோடை காலங்களில் மைனஸ் லெவலில் இருக்கும். ஆனால் இன்று முக்கடல் அணையின் நீர்மட்டம் பிளஸ் 19 அடியாக உள்ளது. இதனால் நாகர்கோவில் நகர மக்களுக்கு இப்போதைக்கு குடிநீர் தட்டுப்பாடு வராது.

**குமரி மாவட்டத்தில் கனமழை நீடிப்பு: குளம்– வாய்க்காலில் உடைப்பு**



குமரி மாவட்டத்தில் கனமழை காரணமாக குளம் மற்றும் வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

<u>14½ செ.மீ. மழை</u>

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்த மழை நேற்று முன்தினம் வரை நீடித்தது. நேற்று காலையில் இருந்து வெயில் அடித்தது. மழை இல்லை.

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:–

பேச்சிப்பாறை 51.8, பெருஞ்சாணி– 62.8, சிற்றார் 1– 55, சிற்றார் 2– 37.4, பொய்கை– 38.2, மாம்பழத்துறையாறு– 40, இரணியல்– 44, ஆணைக்கிடங்கு– 48, குளச்சல்– 72, குருந்தங்கோடு– 36.2, அடையமடை– 79, திற்பரப்பு– 74.6, நாகர்கோவில்– 7.8, பூதப்பாண்டி– 84, சுருளோடு–109, கன்னிமார்– 146, ஆரல்வாய்மொழி– 38.2, மயிலாடி– 15.2, கொட்டாரம்– 27.4 என்ற அளவில் மழை பதிவாகியிருந்தது.

இதில் அதிகபட்சமாக கன்னிமார் பகுதியில் 146 மி.மீ. (14½ செ.மீ.) மழை பதிவாகி இருந்தது.

<u>தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>

இந்த தொடர் மழையினால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு 1266 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த பேச்சிப்பாறை அணைக்கு நேற்று 1585 கன அடி தண்ணீரும், ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த பெருஞ்சாணி அணைக்கு நேற்று 1834 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

150 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த சிற்றார் –1 அணைக்கு நேற்று 221 கன அடி தண்ணீரும், 219 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த சிற்றார்–2 அணைக்கு 322 அடி தண்ணீரும், பொய்கை அணைக்கு 2 கன அடி தண்ணீரும், 43 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த மாம்பழத்துறையாறு அணைக்கு நேற்று 62 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு மட்டும் வினாடிக்கு 3419 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

இதனால் அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 38.95 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 69.70 அடியாகவும், சிற்றார்–1 அணையின் நீர்மட்டம் 16.76 அடியாகவும், சிற்றார்–2 அணையின் நீர்மட்டம் 16.86 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 8.90 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 54.12 அடியாகவும் உள்ளன. மாம்பழத்துறையாறு அணை நிறைந்து விட்டதால் அணைக்கு வரும் 62 கன அடி தண்ணீர் அப்படியே உபரியாக திறந்து விடப்படுகிறது.

77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் தற்போது 70 அடியை நெருங்கியுள்ளது. இன்னும் ஒரு அடியை எட்டியதும் பெருஞ்சாணி அணைத்தண்ணீர் பாய்ந்தோடும் கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். அதேபோல் பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 42 அடியை நெருங்கியதும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். 18 அடி கொள்ளளவைக் கொண்ட சிற்றார் அணைகளின் நீர்மட்டம் 17 அடியை நெருங்கியுள்ளது. எனவே இந்த அணைகளில் இருந்து எப்போது வேண்டுமானாலும் தண்ணீர் திறந்துவிடப்பட வாய்ப்புள்ளது. எனவே கரையோரப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<u>குளம் உடைப்பு</u>

இந்த மழையினால் குமரி மாவட்டத்தின் குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. குழித்துறை தாமிரபரணியாறு, பழையாறு, பரளியாறு போன்ற ஆறுகளிலும், மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

பழையாற்றில் சுசீந்திரம் பாலத்தின் முக்கால் பாலம் அளவுக்கு தண்ணீர் ஓடுகிறது.

மழை வெள்ளப்பெருக்கினால் இறச்சகுளத்தில் இருந்து தாழக்குடி செல்லும் வழியில் உள்ள புத்தேரி நெடுங்குளத்தில் 20 மீட்டர் அளவுக்கு உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது. வெளியேறும் தண்ணீர் அருகில் உள்ள நெல் நாற்றங்கால் பகுதியிலும், மரச்சீனி பயிரிடப்பட்டுள்ள பகுதிகளிலும் புகுந்து வெள்ளக்காடாய் காட்சி அளிக்கிறது.

இந்த குளத்துக்கு அருகில் சுமார் 1 கி.மீ. தொலையில் உள்ள விளாவடி வாய்க்காலிலும் 15 மீட்டர் அளவுக்கு உடைப்பு ஏற்பட்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு உடைப்புகளையும் சரிசெய்யும் பணியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். முதல் கட்டமாக உடைப்புகளை அடைக்க மணல் மூட்டைகளை தயார் செய்யும் பணியில் பொதுப்பணித்துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குளங்கள் நிரம்புகின்றன

ஆறுகளில், வாய்க்கால்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பபெருக்கின் காரணமாக பாசனக்குளங்களும் வேகமாக நிரம்பி வருகின்றன.

குமரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) கட்டுப்பாட்டின்கீழ் 2040 குளங்கள் உள்ளன. இதில் 460 குளங்கள் முழுமையாக நிரம்பி உள்ளன. 580 குளங்கள் 75 சதவீதம் நிரம்பியுள்ளன. 316 குளங்கள் 50 சதவீதம் நிரம்பியுள்ளன. 684 குளங்கள் 25 சதவீதம் நிரம்பியுள்ளன. தொடர் மழையினால் மாவட்டம் முழுவதும் தாழ்வான குடியிருப்பு பகுதிகள் அனைத்தையும் வெள்ளம் சூழ்ந்துள்ளன. பல்வேறு இடங்களில் வெள்ளம் புகுந்துள்ளன.

தொழில்கள் பாதிப்பு

தொடர்ந்து பெய்து வரும் மழையால் குமரி மாவட்டத்தில் நடைபெறும் செங்கல்சூளைத் தொழில்கள், உப்பளத் தொழில்கள், ரப்பர் பால் வெட்டும் தொழில் ஆகியவை முடங்கியுள்ளன.

இதனால் இந்த தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர் வேலையின்றி தவித்து வருகின்றனர்.

**கோவையில் கால்கள் முறிந்த மயிலுக்கு அறுவை சிகிச்சை**



கோவை செல்வபுரத்தில் ஒரு மயில் வாகனத்தில் அடிபட்டு கால்கள் முறிந்த நிலையில் பறக்க முடியாமல் துடித்துக்கொண்டு இருந்தது. இதனை தன்னார்வ தொண்டர்கள் மீட்டு, கோவை எட்டிமடையில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஒப்படைத்தனர். டாக்டர் அசோகன் தலைமையில், மயிலுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இரு கால்களும் முறிந்து இருந்ததால் முன்னங்கால்கள் அகற்றப்பட்டு பிளாஸ்டிக்கினால் செயற்கை கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. தற்போது மயில் குணம் அடைந்துள்ளது. இதுகுறித்து டாக்டர் அசோகன் கூறும்போது, மயிலுக்கு தற்காலிகமாக செயற்கை கால் பொருத்தப்பட்டு இருந்தாலும் நிரந்தர சிகிச்சைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மயில் மீண்டும் பறக்கும் நிலைமையை அடையும் என்று தெரிவித்தார்.

**நாகையில் மீன்வள பொறியியல் கல்லூரி தொடக்கம் விண்ணப்பிக்க 17–ந்தேதி கடைசி நாள்**




நாகையில் மீன்வள பொறியியல் கல்லூரி தொடங்கப்படுகிறது. இந்த கல்லூரியில் சேர விண்ணப்பிக்க வருகிற 17–ந்தேதி கடைசி நாள் ஆகும். அறிக்கை : தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக துணை வேந்தர் பாஸ்கரன்மணிமாறன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:–

மீன்வள பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. மாணவர்கள் www.tnfu.ac.in என்ற இணையதளத்தில் இளநிலை மீன்வள அறிவியல், இளநிலை மீன்வள பொறியியல் ஆகிய பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். இளநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்புக்கு மொத்தம் 60 இடங்கள் உள்ளன. இதில் தூத்துக்குடியில் உள்ள மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 40 இடங்களும், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் உள்ள மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 20 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாகையில் மீன்வள பொறியியல் கல்லூரி

மேலும் இந்த ஆண்டு நாகையில் மீன்வள பொறியியல் கல்லூரி புதிதாக தொடங்கப்படுகிறது. இந்த கல்லூரியில் பி.இ. பட்டப்படிப்பிற்கு 20 மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட உள்ளனர். இதற்கான விண்ணப்ப கட்டணம் எஸ்.சி., எஸ்.சி.ஏ., எஸ்.டி., வகுப்பினருக்கு ரூ.300–ம், இதர வகுப்பினருக்கு ரூ.600–ம் ஆகும். விண்ணப்பத்தை இணையதளம் மூலமாக அடுத்த மாதம் (ஜூன்) 17–ந்தேதிக்குள் வரை விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணமும் இணையதளம் மூலமாகவே செலுத்த வேண்டும். இதற்கான உத்தேச கலந்தாய்வு வருகிற ஜூலை மாதம் 3–வது வாரத்தில் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகரன்

**குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி நாளை தொடங்குகிறது**



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி நாளை (சனிக்கிழமை) தொடங்குகிறது. இதில், 500 கிலோ எடை உள்ள திராட்சை பழங்களை கொண்டு தோடர் காட்டெருமை உருவம் அமைக்கப்படுகிறது.

<u>*கோடை சீசன்*</u>

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனையொட்டி சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க பல்வேறு விழாக்கள் நடத்தப்படுகிறது. இதன்படி கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சியும், கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சியும், ஊட்டி ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சியும், ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சியும் நடைபெற்றன.

<u>பழக்கண்காட்சி நாளை தொடங்குகிறது</u>

இந்த நிலையில் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 57–வது பழக்கண்காட்சி தொடக்க விழா நாளை(சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு நடக்கிறது. இந்த விழாவுக்கு கலெக்டர் சங்கர் தலைமை தாங்கி கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.

பழக்கண்காட்சியை முன்னிட்டு பூங்காவில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. அவைகள் தற்போது பூத்துக்குலுங்குகின்றன. மேலும், இந்த பழக்கண்காட்சியில் திருச்சி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலை துறை சார்பில் அரங்குகள் வைக்கப்படுகிறது. மேலும் தனியார் அரங்குகளும் இடம் பெறுகிறது.

இந்த கண்காட்சியில் சிறப்பு அம்சமாக 500 கிலோ திராட்சை பழங்களை கொண்டு தோடர் காட்டெருமை உருவம் அமைக்கப்படுகிறது. மேலும், இந்த கண்காட்சியில் நீலகிரி மலை மாவட்ட பழங்களான துரியன், மங்குஸ்தான், பீச்சீஸ், பிளம்ஸ், ஊட்டி ஆப்பிள், பேரி போன்ற பழங்களும் இடம் பெறுகிறது. பள்ளி மாணவ– மாணவிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் பழங்களின் பெயர்களை தெரிந்து கொள்வதற்காக அந்தந்த பழங்களின் பெயர்கள் ஒட்டப்பட உள்ளது.

<u>நாளை மறுநாள்</u>

(ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு பழக்கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடக்கிறது.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி மற்றும் அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

**ஆண்டிப்பட்டி பகுதியில் மழையால் வெங்காய சாகுபடி பாதிப்பு**



ஆண்டிப்பட்டி பகுதியில் கடந்த சில வாரங்களாக பெய்த மழையால் வெங்காய சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. செடியின் வேர்பகுதியிலேயே வெங்காயம் அழுகி காணப்படுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சின்னவெங்காயம் சாகுபடி

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள அணைக்கரைப்பட்டி, சிலுக்குவார்பட்டி, தர்மத்துபட்டி, மூணான்டிபட்டி, புள்ளிமான்கோம்பை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது. வைகை ஆற்றங்கரைபகுதியில் அமைந்துள்ள இந்த கிராமங்களில் வருடம் முழுவதும் காய்கறி சாகுபடி நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டது.

இந்த ஆண்டு கோடையில் யாருமே எதிர்பார்க்காத வகையில் தேனி மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. இந்த மழையால் மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அதே நேரத்தில் முருங்கை, மா, சின்ன வெங்காயம், காலிபிளவர் காய்கறிகள் பயிரிட்ட விவசாயிகள் வேதனை அடைந்தனர்.

விவசாயிகள் கவலை

இந்த ஆண்டு கோடைகாலத்தில் அதிகமான அளவு மழை பெய்ததால் ஆண்டிப்பட்டி பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த சின்னவெங்காய செடிகள் நீரில் மூழ்கின. இதனால் அறுவடையை எட்டும் நிலையில் சின்ன வெங்காயம் வேர்பகுதிகளில் அழுகும் நிலை ஏற்பட்டது. மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்வது நின்றுவிட்ட நிலையில் ஆண்டிப்பட்டி பகுதியில் பயிரிடப்பட்டு இருந்து வெங்காயம் அறுவடை செய்யப்பட்டது. ஆனால் மழையின் பாதிப்பால் வேர் பகுதிகளில் அழுகி காணப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதனால் அறுவடை செய்த வெங்காயத்தை தரம் பிரித்து, திறந்த வெளியில் உலர வைத்து, பின்னர் சந்தைக்கு கொண்டு செல்கின்றனர். இருப்பினும் வெங்காயம் தரமானதாக இல்லாததால் உரிய விலை கிடைக்கவில்லை. இதனால் இந்த ஆண்டு வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் நஷ்டமடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**கடுகு இறக்குமதி தடை விரைவில் நீக்கம்: சீனா உறுதி**



பெய்ஜிங்: இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடுகு தரமற்றதாகவும், அதிக ரசாயனம் கலந்து விளைவிக்கப்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து, இந்தியாவிலிருந்து கடுகு இறக்குமதிக்கு சீனா அரசின் தரக்கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வை துறையினர் கடந்த

2011-ல் தடை விதித்தனர். இந்நிலையில், கடந்த வாரம் பிரதமர் மோடி சீனாவுக்கு அரசுப் பயணம் சென்றார். அப்போது, இரு நாடுகளின் வர்த்தக உறவுகளை அதிகரிக்கும் நோக்கில் இரு நாட்டு அரசுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இதன் அடிப்படையில், இந்தியாவிலிருந்து கடுகு இறக்குமதிக்கு விரைவில் தடை நீக்கப்படும் என்று சீன அரசு இணையதளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் கடுகு தேவை பெரும்பகுதி இந்தியாவின் மூலமே நிறைவு செய்யப்படுகிறது. கடந்த 2011-ல் இந்தியா 6,50,000 டன் கடுகை சீனாவுக்கு ஏற்றுமதி செய்தது குறிப்பிடத்தக்கது.

பெய்ஜிங்: இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடுகு தரமற்றதாகவும், அதிக ரசாயனம் கலந்து விளைவிக்கப்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து, இந்தியாவிலிருந்து கடுகு இறக்குமதிக்கு சீனா அரசின் தரக்கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வை துறையினர் கடந்த 2011-ல் தடை விதித்தனர். இந்நிலையில், கடந்த வாரம் பிரதமர் மோடி சீனாவுக்கு அரசுப் பயணம் சென்றார். அப்போது, இரு நாடுகளின் வர்த்தக உறவுகளை அதிகரிக்கும் நோக்கில் இரு நாட்டு அரசுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இதன் அடிப்படையில், இந்தியாவிலிருந்து கடுகு இறக்குமதிக்கு விரைவில் தடை நீக்கப்படும் என்று சீன அரசு இணையதளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் கடுகு தேவை பெரும்பகுதி இந்தியாவின் மூலமே நிறைவு செய்யப்படுகிறது. கடந்த 2011-ல் இந்தியா 6,50,000 டன் கடுகை சீனாவுக்கு ஏற்றுமதி செய்தது குறிப்பிடத்தக்கது.

**கால்நடை மருத்துவமனையில் நிரந்தர மருத்துவரை நியமிக்க கிராம மக்கள் கோரிக்கை**

பென்னாகரம்: பென்னாகரம் அருகே உள்ள கால்நடை மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் அமைக்க கோரிக்கை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் நெருப்பூர் கிராமத்தில் கடந்த 2007ம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி கால் நடை மருத்துவமனை தொடங்கப்பட்டது. நெருப்பூர் பகுதியில், பத்ரள்ளி, மஞ்சாரள்ளி, நாகமரை, சுஞ்சல்நத்தம், இராம தொண்டள்ளி ஊராட்சியை சேர்ந்த 50 கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் சுமார் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பதை பிரதான தொழிலாளக கொண்டுள்ளனர். இப்பகுதியில் உள்ள மக்களின் நீண்டகால கோரிக்கையான கால்நடை மருத்துவமனையை கடந்த திமுக ஆட்சியில் மறைந்த முன்னாள் திமுக சட்டமன்ற உறுப்பினர் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், கடந்த 15 மாதங்களுக்கு முன்பு கால்நடை மருத்துவர் சரவணன் மாறுதலாகி சென்ற பிறகு மருத்துவர் இல்லாமல் கால்நடை ஆய்வாளர் ஒருவரை வைத்து மருத்துவமனை தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும், பெரும்பாலை கால்நடை மருத்துவர் கார்த்திகேயன் தற்காலிக பொறுப்பு வசித்து வருகிறார். நிரந்தர மருத்துவர் இல்லாததால் கால்நடைகளுக்கு பிஎம் ரிப்போர்ட், இன்சூரன்ஸ் மற்றும் உடனடியாக மருத்துவ சிகிச்சை இல்லாமல் கிராமத்து மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். நிரந்தர மருத்துவரை நியமிக்க நெருப்பூர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டிஎன்பிஎல் காகித ஆலைக்கு விருது

க.பரமத்தி: உலகின் டன் மற்றும் பிராட்ஸ்ட்ரீட் நிறுவனமானது ஒரு முன்னணி ஆதாரமான தகவல் நிறுவனமாக உள்ளது. இந்நிறுவனம் இந்தியாவின் தலைசிறந்த 500 நிறுவனங்கள் என்ற புத்தகத்தை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. உயர்வான செயல்திறனை

வெளிப்படுத்தும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் பொருட்டு, இந்நிறுவனம் ஆண்டுதோறும் டன் மற்றும் பிராட்ஸ்ட்ரீட் நிறுவன விருதுகள் என்ற விருதினை, பல்வேறு துறைகளை சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றது. இதன் அடிப்படையில் நடப்பாண்டுக்கு காகிதம் மற்றும் காகித தயாரிப்புகள் பிரிவில், டிஎன்பிஎல் காகித ஆலை காகித நிறுவனத்தை, தலைசிறந்த இந்திய நிறுவனம் என தேர்ந்தெடுத்து உள்ளது. இவ்விருது வழங்கும் விழா கடந்த 13 மே, 2015 மும்பையில் உள்ள ட்ரைடென்ட் ஓட்டலில் நடைபெற்றது. இவ்விருதினை இந்திய முன்னாள் நிதி அமைச்சர் யஸ்வந்த் சின்ஹா, இந்திய சீரமைப்பு நிறுவனத்தின் நிரந்தர உறுப்பினர் பிபேக் டெப்ராய், ஆகியோரால் டிஎன்பிஎல் காகித ஆலைக்கு வழங்கப்பட்டது .இதனை துணை மேலாண்மை இயக்குநர் வெள்ளியங்கிரி பெற்றுக்கொண்டார்.

## கோடை மழையை வேளாண் பணிக்கு ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்துவது அவசியம்

அன்னவாசல்: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பரவலாகப் பெய்து வரும் கோடை மழையினை விவசாயிகள் வேளாண் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்திக்கொள்வது அவசியம் என வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.இதுகுறித்து புதுகை வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது புதுகை மாவட்டத்தில் கோடைமழை அனைத்து வட்டாரங்களிலும் பரவலாகப் பெய்து வருகிறது.

இம்மழையினை விவசாயிகள் ஆக்கப்பூர்வமாக வேளாண் பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இம்மழையின் ஈரத்தினை பயன்படுத்தி, கோடை உழவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் நிலத்தில் நீர் இறங்கும் திறன் அதிகரிப்பதோடு மண்ணில்

காற்றோட்டம் ஏற்பட்டு நுண்ணுயிர்களின் செயல்பாடும் அதிகரித்து மண்வளம் கூடும். மேலும் கோரை போன்ற களைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்படுவதோடு நிலத்தினடியிலுள்ள கூண்டுப் புழுக்கள் வெளியில் கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது.மானாவாரி நிலக்கடலை விதைப்பு: மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் இக்கோடை மழையினைப் பயன்படுத்தி நிலத்தினை உழவு செய்து விதைப்பிற்குத் தயார் செய்யலாம்.

ஏற்கெனவே விதைப்பிற்குத் தயாராகவுள்ள விவசாயிகள் இம்மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி விதைப்பு செய்யலாம். அனைத்து வட்டாரங்களிலும் கே 6 ரக நிலக்கடலை விதைகள் இருப்பிலுள்ளது. இவ்விதையினைப் பயன்படுத்தி மானாவாரி விதைப்பு மேற்கொள்ளலாம்.பசுந்தாள் உர விதைகள் விதைப்பு:இம்மழையினைப் பயன்படுத்தி பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு விதைகளை விதைப்புச் செய்து பூப்பூக்கும் முன் மடக்கி உழவு செய்தால் மண்வளம் பெருகி தொடர்ந்து சாகுபடி செய்யும் பயிர்களில், குறிப்பாகக் குறுவை மற்றும் சம்பா நெற்பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. பசுந்தாள் உர விதைகளுக்கு வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் குடுமியான்மலை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

குறுவை நெல் சாகுபடி: நீர் வசதியுள்ளகுறுவைச் சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் இம்மழையினைப் பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி மேற்கொள்ள நாற்றங்கால் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளலாம். திருந்திய நெல் சாகுபடியில் 14 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுகளை நடவு செய்வதால் இம்மழையின் ஈரத்தினைப் பயன்படுத்தி குறுகிய கால நாற்றங்கால் அமைத்து நடவு செய்யலாம். இதனால் நீர்த் தேவை குறைவதோடு கூடுதல் மகசூல் பெறலாம்.எனவே புதுகை மாவட்ட விவசாயிகள் கோடை மழையினை குறிப்பிட்டுள்ளபடி ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென

கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

**குறுவை சாகுபடிக்கு பாய் நாற்றங்கால் விவசாயிகள் ஆர்வம்**

தரங்கம்பாடி: செம்பனார்கோவில் பகுதியில் 80 சதவீத விவசாயிகள் குறுவை சாகுபடிக்கு பாய் நாற்றங்கால் விட்டுள்ளனர். நாகை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் திருக்கடையூர் பொறையார், ஆக்கூர், ஆயப்பாடி, சங்கரன்பந்தல், இலுப்பூர், திருவிளையாட்டம், ஈச்சங்குடி, மேமாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் குறுவை பயிர் சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் பாய்நாற்றங்காலில் விதை விட்டு குறுவை சாகுபடி செய்துள்ளனர். வயலில் பாலிதீன் பேப்பரை போட்டு, அதைச்சுற்றி மர சட்டங்களை வைத்து இடைப்பட்ட பகுதியில் மண்னை தூவி அதில் விதை விடுவார்கள். பாய்நாற்றங்காளில் விதை விடுவதால் ஏற்படும் பலன்கள் குறித்து செம்பனார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் கூறியதாவது: பாய்நாற்றங்காலில் விதை விடுவதால் விவசாயிகள் நாற்றங்காலை சரிசெய்யும் வேலை இருக்காது. அதனால் செலவும் இருக்காது. இதை 17 நாட்களில் நட்டு விடலாம். சாதாரண முறையில் விதை விட்டால் நாற்றுப்பறிக்க ஏக்கருக்கு ரூ.2000 செலவாகும். பாய் நாற்றங்காலில் நாற்றுபறிப்பு செலவு மிக மிக குறைவு. இதில் நாற்றுகளும் வீணாகுவதில்லை. ஒற்றை நாற்று முறையிலும் நடவு செய்யலாம். விவசாயிகளுக்கு அதிகமாக விளைச்சல் கிடைக்கும். செம்பனார்கோவில் வட்டாரத்தில் குறுவை சாகுபடியில் 80 சதவீகித விவசாயிகள் பாய் நாற்றங்கால் முறையையே பயன்படுத்துகிறார்கள். பாய் நாற்றங்கால் முறையை பயன்படுத்தாத விவசாயிகளும் இனி வரும் காலத்தில் இம்முறையை பயன்படுத்தி பலனடைய வேண்டும் என்றார்.

**மண்மாதிரி எடுக்க சிறப்பு முகாம்**

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் மண் வள ஆய்வு இயக்கத்தின் சார்பில், 710 மண் மாதிரிகள் எடுக்கப்பட உள்ளன. முதற்கட்ட பணியாக தொ.ஜேடர்பாளையம் வருவாய் கிராமத்தில் மண் மாதிரிகள் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. 10 ஹெக்டேர் பரப்பளவிற்கு ஒரு மண் மாதிரி என்ற விதியின் அடிப்படையில், மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மண்ணை மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி மண் பரிசோதனை செய்திட வேண்டும். இந்த கட்ட மண் மாதிரி முறையில் ஜிபிஆர்எஸ் - உலகளாவிய இடம் காட்டும் கருவியின் மூலம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு முடிவுகள் துல்லியமாக வழங்கப்பட உள்ளன. மண் மாதிரி முடிவுகள் மூலம் உர பரிந்துரை வழங்கப்பட உள்ளன. மண் மாதிரி முகாமினை நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். முகாமில் வேளாண் அலுவலர் உமாமகேஸ்வரி, துணை வேளாண்மை அலுவலர் மாதேஸ்வரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோவிந்தசாமி, ராமமூர்த்தி, ஜெயசீலன் மற்றும் தோட்டக்கலை துறை துணை அலுவலர்கள் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் மண் வள ஆய்வு இயக்கத்தின் சார்பில், 710 மண் மாதிரிகள் எடுக்கப்பட உள்ளன. முதற்கட்ட பணியாக தொ.ஜேடர்பாளையம் வருவாய் கிராமத்தில் மண் மாதிரிகள் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. 10 ஹெக்டேர் பரப்பளவிற்கு ஒரு மண் மாதிரி என்ற விதியின் அடிப்படையில், மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மண்ணை மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி மண் பரிசோதனை செய்திட வேண்டும். இந்த கட்ட மண் மாதிரி முறையில் ஜிபிஆர்எஸ் - உலகளாவிய இடம் காட்டும் கருவியின் மூலம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு முடிவுகள்

துல்லியமாக வழங்கப்பட உள்ளன. மண் மாதிரி முடிவுகள் மூலம் உர பரிந்துரை வழங்கப்பட உள்ளன. மண் மாதிரி முகாமினை நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். முகாமில் வேளாண் அலுவலர் உமாமகேஸ்வரி, துணை வேளாண்மை அலுவலர் மாதேஸ்வரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோவிந்தசாமி, ராமமூர்த்தி, ஜெயசீலன் மற்றும் தோட்டக்கலை துறை துணை அலுவலர்கள் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வாழைத்தார் விலை சரிவு**

பரமத்திவேலூர்: நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலூகா, சோழசிராமணி, ஜேடர்பாளையம், பாண்டமங்கலம், பொத்தனூர், நன்செய் இடையார், குப்புச்சிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. வாழைத்தார்களை விவசாயிகள் திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை, நாமக்கல், நீலகிரி, சேலத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில் பூவன் தார் ரூ.450க்கும், ரஸ்தாலி தார் ரூ.350க்கும், கற்பூரவள்ளி தார் ரூ.300க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.350க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.300க்கும் விற்றது. இந்த வாரத்தில் பூவன் வாழை தார் ரூ.250க்கும், ரஸ்தாலி தார் ரூ.250க்கும், கற்பூரவள்ளி வாழை தார் ரூ.200க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.250க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.400க்கும் விற்றது. கடந்த வாரத்தை விட ரூ.200லிருந்து ரூ.100 வரை விலை குறைந்து விற்பனையானது. மழை காரணமாக இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்

**முட்டை உற்பத்தியை தக்க வைக்க தீவன பரிசோதனை அவசியம்**

நாமக்கல்: முட்டை உற்பத்தியை தக்க வைக்க தீவன பரிசோதனை அவசியம் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து,

நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கை:அடுத்த மூன்று நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழைத்தூறல் இருக்கும். ஓரளவு மேகமூட்டமும், மிதமான காற்றும் நிலவும் வாய்ப்புள்ளதால் கோழிகளிடையே வெப்ப அயற்சி ஏற்படும் வாய்ப்பு குறைவு. தீவனம் எடுக்கும் அளவும் இயல்பை ஒட்டியே இருக்கும் என்பதால் முட்டை உற்பத்தி இயல்பாக இருக்கும். மக்காச்சோளம், கடலை மற்றும் சூர்யகாந்திபுண்ணாக்கின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கவேண்டும். பூஞ்சை நச்சுப் பரிசோதனை செய்து பயன்படுத்துதல் முட்டை உற்பத்தியைத் தக்க வைக்க உதவும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி இந்து

தமிழால் இணைவோம்

**மாசுபட்ட பாலாற்றை மீட்க புதிய தொழில்நுட்பம்_, தோல் தொழிற்சாலைகளின் குரோமியம் விஷத்தை அகற்ற உயிரி - நிவாரணம்_: விஞ்ஞானிகள் தகவல்_**



வேலூரில் குரோமியம் கழிவு கலந்ததால் பாழாகிப் போன பாலாறு. | படம்: ந.வினோத்குமார்

தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து பாலாற்றில் வெளியேற்றப்பட்ட குரோமியம் என்ற நச்சுப் பொருளால் நிலத்தடி நீர் மட்டுமல்லாது மண் வளமும் மாசடைந்துபோனது.

இந்த நிலையை நிச்சயம் சீர் செய்ய முடியும் என்று உறுதியாக தெரிவிக்கிறார்கள் விஞ்ஞானிகள். பெங்களூருவில் உள்ள 'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ்' கல்வி மையத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் கே.ஏ.நடராஜன், பாலாற்றை 'பயோ ரெமடியேஷன்' எனும் தொழில்நுட்பம் மூலம் மீட்பது குறித்து பல தகவல்களை நம்முடன் பகிர்ந்து கொள்கி றார்.

**குரோமியத்தை பிரிக்கும் பாசி**

''தோல் பதனிடும் தொழிற்சாலை கள் பயன்படுத்தும் மிக முக்கிய ரசாயன பொருள் குரோமியம். இது நீரில் கரையக்கூடியது. குரோமியத்தின் நச்சுத்தன்மையை இரு விதங்களில் குறைக்கலாம். ஒன்று 'ஃபெர்ரஸ் சல்பேட்' எனும் ரசாயனத்தைக் கொண்டு செய்ய லாம். அல்லது, சூடோமொனாஸ், பாசில்லஸ் போன்ற பாக்டீரியா வகைகள், பூஞ்சை, பாசி போன்ற நுண்ணுயிர்களைக் கொண்டு செய்யலாம். இதற்கு 'பயோ ரெமடியேஷன்' என்று பெயர்.

குரோமியத்தால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகள் மற்றும் கழிவுநீர் ஆகியவற்றில் இந்த நுண்ணுயிர்களை வளர்க்க வேண்டும். அவை குரோமியத்தை உணவாக எடுத்துக்கொண்டு வளரும். அப்போது நீரில் இருந்தும் நிலத்தில் இருந்தும் குரோமியம் தனியாகப் பிரிந்துவிடும். அந்த குரோமியத்தை தொழிற்சாலைகள் மீண்டும் மறுசுழற்சி செய்து பயன்படுத்தலாம்.

இந்த 'பயோ ரெமடியேஷன்' முறையை தொழிற்சாலைக் குள்ளாகவே சேகரிக்கப்பட்டுள்ள குரோமியம் கழிவுகளில் பின்பற் றலாம்" என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் டீன் (வேளாண்மை) முனைவர் மகிமைராஜா இதுகுறித்து மேலும் பல தகவல்களைப் பகிர்ந்துகொள் கிறார். பாலாற்றுப் பகுதியில் 1996-ம் ஆண்டு முதல் இவர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

‘‘தொடக்க காலங்களில் இயற்கை முறையிலான தோல் பதனிடும் முறையைத்தான் பயன் படுத்தினார்கள்.

ஆனால், அவ்வாறு செய்யும்போது தோலில் உள்ள சில உயிரணுக்கள் தொடர்ந்து அழுகிக் கொண்டே இருக்கும். அந்த அழுகலைத் தடுக்கவே ரசாயன முறையில் தோல் பதனிடுவதைச் செய்ய ஆரம்பித்தார்கள். எனவே குரோமியம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது.

**கடுகு பயிரிடலாம்**

நீரிலும், நிலத்திலும் கலக்கும் இந்த குரோமியத்தை உணவுச் சங்கிலியில் நுழைந்துவிடாதவாறு தடுக்க நம்மால் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அதில் ஒன்று, ‘குரோமியத்தை பரவ விடாமல் செய்தல்'. இயற்கை உரங்கள், கம்போஸ்ட், கோழி உரம் போன்ற பொருட்கள் மூலம் இதனைச் செய்ய முடியும்.

பின்னர் அங்கு சூரியகாந்தி, கடுகு பயிர் போன்றவற்றைப் பயிர் செய்யலாம். இவை இரண்டும் குரோமியத்தை ஏற்றுக்கொண்டு அதனை பரவவிடாமல் செய்யும் திறன் கொண்டவை. எனினும், இவற்றில் இருந்து கிடைக்கும் பொருட்களை உணவுக்காகவோ அல்லது வேறு பயன்பாடுகளுக் காகவோ மனிதர்கள் பயன்படுத்த முடியாது.

இதேபோன்று நீரில் இருந்து குரோமியத்தை தனியே பிரிப்ப தற்கு ‘ரீட் பெட்' எனும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம். அதாவது, ‘அருண்டோ' எனும் பெரிய நாணல் புல், ‘டைபா' எனும் பூனைவால் நாணல் போன்ற நாணல் புற்களைக் கொண்டு நீரை சுத்திகரிக்கலாம். அல்லது ‘வெர்மிகுலேட்' எனும் தாதுப் பொருளைப் பயன்படுத்தியும் குரோமியம் கலந்துள்ள நீரைச் சுத்திகரிக்கலாம்.

குரோமியம் கலந்துள்ள நிலத்தைச் செப்பனிடுவதற்கு குறைந்தபட்சம் 6 மாதங்களா வது ஆகும். நாணல் புல் பயன் படுத்தி நீரைச் சுத்திகரிப்பதற்கு சில கட்டுமான வசதிகள் தேவைப்படும்" என்று தெரிவித்தார்.

இதுகுறித்து 'பாலாறு பாது காப்பு மக்கள் இயக்க' தலைவர் ஜமுனா தியாகராஜன் கூறும்போது, ''இந்த தொழில்நுட்பங்களை அரசும், தொழிற்சாலைகளும் இணைந்து செயல்படுத்த வேண் டும். தோல் பதனிடும் தொழிற் சாலைகளின் 'பெருநிறுவன சமூகப் பொறுப்பு'க்கு (கார்ப்பரேட் சோஷியல் ரெஸ்பான்ஸிபிலிட்டி) ஒதுக்கும் நிதியை இதற்குப் பயன்ப டுத்த வேண்டும் என்று விரைவில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரவுள்ளோம்'' என் றார்.

*(கட்டுரையாளர், தொழிற்சாலை மாசுபாடு குறித்து ஆய்வு செய்வதற்காக டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் 19-வது ஊடக நல்கை (Centre for Science & Environment, CSE - 19th Media Fellowship) பெற்றவர்.)*___

Keywords: மாசுபட்ட பாலாறு, புதிய தொழில்நுட்பம்_, தோல் தொழிற்சாலை, குரோமியம், விஞ்ஞானிகள்

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு**



தமிழக–கர்நாடக எல்லையில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான சாம்ராஜ் நகர், கொள்ளேகால், அன்னூர், ராசிமணல், உகுனி, தெப்பக்குழி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி, தளி, தேன்கனிக்கோட்டை, நாட்ராபாளையம், உரிகம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

நேற்று முன்தினம் காலை ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 2100 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி பிலிகுண்டுவில் மத்திய நீர் வள ஆணைய அதிகாரிகள் எடுத்த கணக்கெடுப்பின்படி 9,600 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. பின்னர் 11 ஆயிரம் கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. இன்றும் நீர் வரத்து அதிகமாக உள்ளது. இதனால் வறண்டு கிடந்த ஐவர் பாணி, சினி பால்ஸ், மற்றும் முக்கிய அருவிகளில் தண்ணீர் அதிகமாக கொட்டுகிறது. ஆண்கள் மற்றும் பெண்கள் குளிக்கும் அருவிகளில் நீர் செந்நிறத்தில் கொட்டுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக குளித்து மகிழ்கிறார்கள். நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி தொங்கு பாலத்தின் வழியாக சினிபால்ஸ் பகுதிக்கு செல்ல சுற்றுலா

பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதேபோல மணல் திட்டு, கோத்திப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் காவிரி ஆற்றில் நீராடவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது .

பரிசல் ஓட்டிகள் மாமரத்துக்கடவு உள்ளிட்ட ஆபத்தான பகுதிகளுக்கு பரிசலை ஓட்டிச் செல்லாமல் பாதுகாப்பான பகுதிகளுக்கு ஓட்டிச்செல்லுமாறு பெண்ணாகரம் தாசில்தார் கனகராஜ் கூறி உள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:–

தமிழக – கர்நாடக எல்லைப்பகுதியில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் பாதுகாப்பான பகுதிகளில் பரிசலை இயக்க பரிசல் ஓட்டிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது. பரிசல் ஓட்டிகள் பரிசலை இயக்குவதை தற்போது தீயணைப்பு படையினர் மற்றும் போலீசார் கண்காணித்து வருகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து வருவதால் மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்து உள்ளது. நேற்று அணையின் நீர்மட்டம் 68.11 அடியாக இருந்தது. இன்று காலை இது 69.16 அடியாக உயர்ந்தது. அணைக்கு நேற்று 5400 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இன்று காலை நிலவரப்படி அணைக்கு 10962 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

**தஞ்சையில் பலத்த மழை: கோவிலுக்குள் வெள்ளநீர் புகுந்தது**

தஞ்சையில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் கோடை வெயிலின் தாக்கம் குறைந்து பூமி குளிர்ந்து குளிர்ந்த காற்று வீசுகிறது. நேற்று காலை முதல் வெயில் கொளுத்தியது. மாலை 6 மணி அளவில் திடீரென கருமேகங்கள் திரண்டு வந்தன. திடீரென 6.30 மணி அளவில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழையாக பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

இந்த பலத்த மழையினால் சாலைகளில் தண்ணீர் வெள்ளம் போல் ஓடியது. மேலும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் புகுந்தது. தஞ்சை

மேலவீதியில் உள்ள மூலை அனுமார் கோவிலுக்குள் மைழநீர் புகுந்ததால் வெள்ளம்போல் காட்சியளித்தது. இதனால் கோவிலுக்கு வந்த பக்தர்கள் அனைவரும் முழங்கால் அளவு தண்ணீரில் சென்று சாமி தரிசனம் செய்தனர். கோவிலுக்குள் புகுந்த வெள்ளநீரால் பக்தர்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

**மலைப்பகுதியில் மழைநீடிப்பு: பாபநாசம், சேர்வலாறு அணை நீர்மட்டம் உயர்வு**



நெல்லை மாவட்டத்தில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக பரவலாக மழை பெய்து வருகிறது. அக்னிநட்சத்திரம் தொடங்கிய கடந்த 4–ந் தேதி முதல் அவ்வப்போது மழை பெய்த வண்ணம் உள்ளது.

கடும் கோடை வெயில்காலம் மழை காலம் போல மாறியுள்ளது.

நேற்று காலை மாவட்டத்தில் லேசான வெயில் அடித்தது. பின்னர் மதியம் நெல்லை, ராதாபுரம், செங்கோட்டை, நாங்குநேரி பகுதியில் மழை கொட்டியது. நெல்லை டவுண் பகுதியில் கனமழை பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

பிரதான பாசன அணையான பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று 73.60 அடியாக இருந்தது. இந்த அணை இன்று மேலும் 2 அடி உயர்ந்து 75.95 அடியாக உயர்ந்து உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1892 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

இதே போல நேற்று 87.86 அடியாக இருந்த சேர்வலாறு அணை நீர்மட்டம் இன்று மேலும் 4 அடி உயர்ந்து 91.70 அடியாக அதிகரித்து உள்ளது. நேற்று 83.85 அடியாக இருந்த மணிமுத்தாறு அணை நீர்மட்டம்

84 அடியாகவும், 56.90 அடியாக இருந்த கடனா அணை நீர்மட்டம் 57.40 அடியாகவும், அதிகரித்து உள்ளன.

அணைப்பகுதியில் இன்று காலை வரை பாபநாசத்தில் 6 மி.மீ., சேர்வலாறில் 3 மி.மீ., மணிமுத்தாறில் 1.2 மி.மீ. கடனா அணையில் 2 மி.மீ., ராமநதியில் 9 மி.மீ., குண்டாறில் 3.3 மி.மீ., கொடுமுடியாறில் 25 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

இதர பகுதிகளில் நெல்லையில் 10 மி.மீ., ராதாபுரத்தில் 3 மி.மீ., செங்கோட்டையில் 4 மி.மீ., நாங்குநேரியில் 7 மி.மீ., பாளையில் 3 மி.மீ., தென்காசியில் 2 மி.மீ., சேர்மாதேவியில் 3 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

**சத்திரப்பட்டி பகுதியில் கோடை மழையை பயன்படுத்தி சோளம், கம்பு சாகுபடி**



திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து கோடை மழை பெய்து வந்தது. இதனால் குளங்களில் தண்ணீர் நிரம்பி உள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

இதனை பயன்படுத்தி ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றிய பகுதிகளில் விவசாயிகள் இறவை நிலங்களிலும் மானாவாரி நிலங்களிலும் கம்பு மற்றும் சோள சாகுபடி தொடங்கி உள்ளனர்.

மானாவாரி காடுகளை டிராக்டர்கள் மூலம் உழுது கம்பு, சோள விதைகளை விதைத்து வருகின்றனர். ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் சத்திரப்பட்டி, தேவத்தூர், 16 புதூர், சிந்தலவாடம்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி பகுதிகளில் கோடை சாகுபடி பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

**வேலூர்–திருவண்ணாமலை மாவட்டத்தில் இடி–மின்னலுடன் பலத்த மழை**



வேலூரில் கோடை காலத்தில் எப்போதும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். அக்னி நட்சத்திரம் என்ற கத்திரி வெயில் கடந்த 4–ந் தேதி தொடங்கியது.

அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதல் கடந்த 8–ந் தேதி மட்டும் 101.5 டிகிரி வெயில் கொளுத்தியது. மற்ற நாட்களில் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில் வங்கக்கடலில் ஏற்பட்ட மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

வேலூரில் நேற்று பகலில் வெயில் கொளுத்தியது. மதியம் திடீரென கருமேகங்கள் திரண்ட நிலையில் பலத்த மழை பெய்ய தொடங்கியது. அதன்பின் சாரல் மழையாக மாறியது. இரவு முழுவதும் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது.

இதேபோல் பள்ளிகொண்டா பகுதியில் பெய்த பலத்த மழையால் குடியாத்தம் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் மழை நீருடன் கழிவு நீரும் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் அதில் சிக்கித்தவித்தன. வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, குடியாத்தம், ஆற்காடு உள்பட பல்வேறு பகுதிகளிலும் நேற்று மாலையில் தொடங்கிய மழை இரவு வரை விட்டு விட்டு பெய்து கொண்டே இருந்தது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் திருவண்ணாமலையில் அக்னி நட்சத்திரத்தின்

தாக்கம் இல்லை. நேற்று காலையில் வழக்கம்போல லேசான வெயில் அடித்தது.

மாலை 6 மணிக்கு திருவண்ணாமலையில் திடீர் என்று மழைபெய்யத் தொடங்கியது. தொடர்ந்து 7 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால் ரோடுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதேபோன்று ஆரணியில் நேற்று காலை வெயில் அடித்தது. பகல் 3 மணிக்கு பலத்த மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து 2 மணி நேரம் மழை பெய்தது. இதனால் கோட்டை மைதானத்தில் மழைநீர் தேங்கி குட்டை போல் காட்சியளித்தது.

காய்கறி மார்க்கெட்டில் மழைவெள்ளம் புகுந்தது. இதனால் பொதுமக்களும், வியாபாரிகளும் சிரமத்திற்குள்ளானார்கள். மழை பெய்த போது மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் வி.ஏ.கே. நகரில் உள்ள ஒரு மின்சார டிரான்ஸ்பார்மரில் மின்னல் தாக்கியது. இதனால் டிரான்ஸ் பார்மர் தீ பிடித்து எரிந்தது. அப்போது மின்சாரம் இல்லாததால் பயங்கர விபத்து தவிர்க்கப்பட்டது.

இதேபோன்று கண்ணமங்கலம், தூசி, செய்யாறு, வந்தவாசி, போளூர், செங்கம் உள்பட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. ஆரணியில் 58.9 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

மழை காரணமாக நேற்று இரவு மின்சாரம் தடைபட்டு நகரமே இருளில் மூழ்கியது.

**கொல்லிமலையில் மழை: அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு**



நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால்

ஆகாய கங்கை நீர் வீழ்ச்சி, நம் அருவி, மாசிலா அருவிகளில் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. மேலும் குளிர்ந்த காற்றும் வீசுவதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியாக உள்ளனர்.

தற்போது கொல்லிமலையில் அடிக்கடி மழை பெய்து வருவதால் இந்த ஆண்டு நெல் விளைச்சல், மரவள்ளி கிழங்கு சாகுபடி அதிக அளவில் இருக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். பலா மரங்களில் பிஞ்சு விட்டு உள்ளதால் தற்போது பெய்த மழையினால் பலா விளச்சலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. கொல்லிமலையில் புதிதாக கட்டிய 5 தடுப்பு அணைகளில் தற்போது மழை நீர் தேங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

கோடை விடுமுறை என்பதால் சுற்றுலா பயணிகள் பலர் குடும்பம் குடும்பமாக சுற்றுலா வந்து கொல்லிமலையின் அழகை ரசித்து செல்கிறார்கள்.

நாமக்கல்லில் நேற்று பகலில் இருந்து இரவு 8 மணி வரை விட்டு விட்டு மழை பெய்தது. அதே போல சேந்தமங்கலத்திலும் இரவு 8 மணிக்கு மேல் விட்டு விட்டு மழை பெய்தது. ராசிபுரத்தில் நேற்று பகலில் மட்டும் மழை தூறிக்கொண்டே இருந்தது.

**சதுரகிரியில் மீண்டும் கனமழை– வெள்ளம்: பக்தர்கள் மலைக்கு செல்ல தடை**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்துள்ள தாணிப்பாறை அருகே உள்ள சதுரகிரி மலைமேல் பிரசித்தி பெற்ற சுந்தர மகாலிங்கேஸ்வரர் கோவில் உள்ளது.

இங்கு அமாவாசையையொட்டி நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்துக்கு சென்றனர். அப்போது பெய்த கனமழை காரணமாக மலையில் உள்ள சிற்றோடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நேரம் செல்ல.. செல்ல.. காட்டாற்று வெள்ளமாக தண்ணீர் ஓடியது. அப்போது அங்கு குளித்துக் கொண்டிருந்த 10–க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். இதில் பலியானவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று மதியம் 3 மணியளவில் சதுரகிரி மலைப்பகுதியில் மீண்டும் கனமழை பெய்தது. இதன் காரணமாக மலைப் பகுதியில் உள்ள சிறு சிறு ஓடைகளிலும் தண்ணீர் வரத்து அதிகமானது. இதனால் மீட்பு

பணி பாதிக்கப்பட்டது. இருப்பினும் காவல் துறையினரும், தீயணைப்பு படை வீரர்களும் தீவிரமாக செயல்பட்டு மலையில் சிக்கிக் கொண்ட பக்தர்களை மகாராஜாபுரம், அழகாபுரி வழியாக மாற்றுப்பாதையில் மலை அடிவாரத்துக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து மலைகளில் யாரும் இருக்கிறார்களா? என்பதை கண்காணித்த மீட்பு படையினர் ஒலிபெருக்கி மூலமும் அறிவிப்பு செய்த படி தேடுதல் பணியல் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் தூத்துக்குடி மாவட்டம், புதியமுத்தூரை சேர்ந்த குருசாமி, அவரது மகள் முப்பிடாரி, ஆகியோர் மாயமாகி உள்ளதாக அவர்களது உறவினர்கள் போலீசில் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் 2 பேரையும் தேடும் பணியில் போலீசார் ஈடுபட்டு உள்ளனர். மேலும் வெள்ளத்தில் 10–க்கும் மேற்பட்டோர் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. அவர்களை தேடும்பணியும் தொடர்ந்து நடந்து வருகிறது.

மதுரை மாவட்டம் பேரையூர் வழியாகவும் சதுரகிரி மலைக்கு ஏராளமானோர் செல்வதுண்டு. அப்படி சென்றவர்களும் வெள்ளத்தில் சிக்கினார்களா? ஓடைப்பகுதியில் உடல்கள் ஏதும் ஒதுங்கி உள்ளனா? என்பதை சாப்டூர் வனத்துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். உசிலம்பட்டியை சேர்ந்த ஒருவர் சதுரகிரி சென்றதாகவும், அவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் போலீசாருக்கு புகார் வந்துள்ளது.

சதுரகிரியில் தொடர்ந்து திடீர், திடீரென மழை பெய்து வருவதால் பக்தர்கள் மலைக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. பலியானவர்களின் குடும் பத்திற்கு இயற்கை பேரிடர் நிவாரண நிதியாக தலா ரூ. 1½ லட்சம் தமிழக அரசு அறிவித்துள்ளது.

**புதுவையில் இடி– மின்னலுடன் பலத்த மழை**

புதுவையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக இரவில் மட்டும் இடி– மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

இதனால் ரோட்டோரங்களில் மழை நீர் கரை புரண்டு ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது இந்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இடி– மின்னல் காரணமாக கோவிந்தசாலை பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த டி.வி.க்கள் சேதம் அடைந்தன. புதுவையில் கடந்த 2 நாட்களில் மழை அளவு 8.3 செ.மீ. பதிவாகி இருந்தது. இன்று காலையும் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால் இடி– மின்னலுடன் மழை பெய்தது.

**சூரியசக்தி மின்சக்தி மூலம் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயி**



பவானிசாகர் அருகே உள்ள காராச்சிக்கொரையை சேர்ந்தவர் நந்தகுமார் (வயது 40). விவசாயி. கிராமத்தில் இவருக்கு சொந்தமாக நிலம் உள்ளது. கிணற்றுப்பாசனம் மூலம் விவசாயம் செய்து வந்த நந்தகுமாருக்கு மின்தடை காரணமாக பயிர்களுக்கு உரிய நேரத்தில் நீர் பாய்ச்சமுடியாமல் அவதிப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் வேளாண் பொறியியல் துறை சார்பில் தமிழக அரசின் இலவச சூரியசக்தி மின்மோட்டார் திட்டம் குறித்து தகவலறிந்த நந்தகுமார் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார். இதற்கு விவசாயியின் பங்குத்தொகையான ரூ.1.20 லட்சம் பணத்தை செலுத்தினார்.

இதையடுத்து முன்னுரிமை அடிப்படையில் இவருக்கு ரூ.5 லட்சம் மதிப்புள்ள சூரியசக்தியில் இயங்கும் மின்மோட்டார் கிணற்றில் பொருத்தி தரப்பட்டது.

இதுகுறித்து விவசாயி நந்தகுமார் கூறியதாவது:–

இந்த திட்டம் விவசாயிகளுக்கு பேருதவியாக உள்ளது. பகல்நேரத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்மோட்டாரை இயக்கி பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடிகிறது. கோடைகாலங்களில் மின்தடை காரணமாக பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் சிரமப்பட்டு வந்தேன்.

இதில் பொருத்தப்பட்ட சோலார் பேனல்கள் சூரியன் இருக்கும் திசை நோக்கி சூரிய காந்தி பூ போல திரும்புவதால் மின்மோட்டார் சீராக இயங்குகிறது. இதன் மூலம் சுமார் 5 ஏக்கர் வரை நீர்பாசனம் செய்ய முடிகிறது. இதை பயன்படுத்தி இயற்கை முறையில் வாழை, தக்காளி, கத்தரி, பாகற்காய், பீர்க்கன் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்து லாபம் ஈட்டி வருகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

**நீர்பிடிப்பு பகுதியில் மழை: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 59 அடியை எட்டியது**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடந்த மாத இறுதியில் 50 அடியாக இருந்தது.

இந்த நிலையில் தொடர்ந்து பெய்துவரும் கோடை மழை காரணமாக அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்தது.

நீலகிரி மாவட்டம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்து வரும் மழையினால் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

இதன் காரணமாக நேற்று காலை அணையின் நீர்மட்டம் அணையின் 58.60 அடியாக இருந்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி 59.39 அடியை எட்டி உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2825 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 105 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**குமரியில் மீண்டும் மழை: பெருஞ்சாணி அணை 71 அடியை எட்டியது**



குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக கொட்டி வந்த மழை நேற்று சற்று ஓய்ந்திருந்தது.

இந்த நிலையில் நாகர்கோவில் பகுதியில் இன்று காலை வானத்தில் கருமேகங்கள் திரண்டு மப்பும் மந்தாரமுமாக இருந்தது. பிறகு திடீரென பலத்த மழை பெய்தது. திருவட்டார், குளச்சல், பாலமோர், குலசேகரம், மயிலாடி, கொட்டாரம் பகுதிகளிலும் சாரல் மழை பெய்தது.

மலையோர பகுதிகளிலும் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பாசன குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. 440 குளங்கள் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிகிறது. 581 குளங்கள் 75 சதவீதமும், 353 குளங்கள் 50 சதவீதமும், 666 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளது.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை பகுதிகளிலும் மழை நீடித்து வருவதால் அணைகளின் நீர்மட்டமும் வெகுவாக உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை நீர் மட்டம் இன்று காலை 39.60 அடியாக இருந்தது. அணைக்கு 458 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியை எட்டியது. அணைக்கு 446 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. சிற்றாறு–1 அணையின் நீர்மட்டம் 17.06 அடியாகவும், சிற்றாறு–2 அணையின் நீர்மட்டம் 17.16 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 9.10 அடியாகவும், முக்கடல் அணையின் நீர்மட்டம் 20 அடியாகவும் உள்ளது. மாம்பழத்துறையாறு அணை நிரம்பி வழிந்து வருகிறது.

அணைகள் நிரம்பி வருவதையடுத்து பொதுப் பணித்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**ஊட்டியில் பிளம்ஸ், பேரிக்காய் விளைச்சல் அமோகம்**



நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. தேயிலைக்கு அடுத்தபடியாக சுமார் 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் மலை காய்கறிகளான கேரட், உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் ஊட்டி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது.

நீலகிரியில் விளைவிக்கப்படும் மலை காய்கறிகள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இதனால் மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் காய்கறி பயிரிடப்படுகிறது. இத்துடன் ஆரஞ்சு, பேரிக்காய், பிளம்ஸ் மற்றும் நாவல் பழங்கள் உள்ளிட்ட ஊடுபயிர்களும் விளைவிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி மற்றும் பிற பகுதிகளில் பிளம்ஸ், பீச்சிஸ் மற்றும் பேரிக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. மாவட்டத்தில் தற்போது கோடை சீசன் நடைபெற்று வரும் நிலையில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் ஊட்டிக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். இதன் காரணமாக பிளம்ஸ், பேரிக்காய் அதிக அளவு விற்பனைக்கு வந்து உள்ளன. தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ஊட்டி மார்க்கெட் பகுதிகளில் விற்கப்படும் பிளம்ஸ், பீச்சிஸ் மற்றும் பேரிக்காய் உள்ளிட்டவற்றை சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கிறனர். பிளம்ஸ் பழம் கிலோ ரூ.120–க்கும், பீச்சிஸ் ரூ.70க்கும், பேரிக்காய் ரூ.140–க்கும் விற்பனையாகிறது.

**தொடர்மழை எதிரொலி: நீலகிரி மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் உயர்வு**



நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை கொட்டி வருகிறது. இடைவிடாமல் கொட்டி வரும் மழையின் காரணமாக அங்குள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கெத்தை, குந்தா, மாயார் உள்ளிட்ட அணைகள் தனது முழு கொள்ளளவையும் எட்டும் நிலையில் உள்ளது. 156 அடி கொள்ளளவு கொண்ட கெத்தை அணையில் தற்போது 155 அடிக்கு தண்ணீர் இருக்கிறது. 89 அடி கொள்ளளவு கொண்ட குந்தா அணையின் நீர்மட்டம் 88.5 அடியாக உள்ளது. 17 அடி கொள்ளளவு கொண்ட மாயார் அணையின் நீர்மட்டம் தற்போது 16.5 அடியாக உள்ளது.

இதே போல் முக்குறுத்தி, பைக்காரா, சாண்டிநல்லா, கிளன்மார்கன், அப்பர்பவானி, பார்சன்ஸ்வேலி, போர்த்தி மந்து, அவலாஞ்சி, எமரால்டு, பில்லூர் ஆகிய அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக அப்பர் பவானி, அவலாஞ்சி, எமரால் அணைகளில் 10 அடி அளவுக்கு தண்ணீர் உயர்ந்துள்ளது. காலை, மாலை நேரத்தில் ஏற்படும் அதிகபட்ச மின் தேவையை சமாளிக்கும் அளவுக்கு தண்ணீர் மட்டம் உயர்ந்து இருப்பதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீலகிரி மாவட்டம் குந்தா புனல் மின் திட்டத்தில் உள்ள 6 மின் நிலையங்கள் மூலம் தினமும் 585 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.